திரு. ரா. ரா. முனுசாமி : கேள்வி நேரத்தில்—இந்த அவையில் முனுசாமி, வீராசாமி, குமாரசாமி என பல சாமிகள் இருப்பதால் சாமி என்பதற்குள் எல்லாக் கேள்விகளையும் வீராசாமி தட்டிக்கொண்டு போகிறார்கள். இப்பேர்ப் பட்ட சாமிகளுக்கு மறுபெயர் சூட்ட நமது பேரவைத் தலைவர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந் தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. நடைமுறைக் கேள்விகள்.

(அ) உறுப்பினர்கள் ஒரு துறைக்கு கேள்வி போட்டு, வேறு துறையிலிருந்து விடை அளிக்கப்பட்டதாகக் கூறப்படுவது குறித்தும் உறுப்பினர் கூற்றுக்கும் அமைச்சர் கூற்றுக்கும் முரண்பாடு இருப்பதாகக் கூறப் படுவது குறித்தும்.

திரு. எம். சுரேந்திரன் : சார் ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். கேள்வி நேரத்தில்போது உறுப்பினர்கள்—தாங்கள் கேள்வி போட்ட துறை வேறாகவும், பதிலளிக்கப்படுவது வேறு துறையாகவும்—பொதுப்பணித்துறைக்கு அனுப்பி னேம்—ஊராட்சித் துறையில் இருந்து பதில் அளிக்கப்படுகிறது என்பதாக எல்லாம் குறிப்பிட்டார்கள். இது சம்மந்தமாக வருங்காலத்திலாவது ஒழுங் காக இருக்கும்படியான ரூலிங் தங்களிடம் இருந்து எதிர்பார்க்கிறேன்.

அடுத்து இரண்டாவது விவசாயத் துறை அமைச்சர் பதில் சொல்கிற போது, விவசாயக் கல்லூரிகளுக்கு செலக்ட் கமிட்டி . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயின்ட் ஆப் ஆர்டர் கீழ் வராது.

திரு. எம். சுரேந்திரன் : மிரட்டி கையெழுத்து வாங்கப்பட்டதாக கோவை செழியன் கூறினார்களே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயின்ட் ஆப் ஆர்டர் கீழ் வராது. உறுப்பினர் கூறியதற்கும், அமைச்சர் கூறியதற்கும் முரண்பாடு இருந்தால் அதைக் கொண்டு வருவதற்கு வேறு முறை இருக்கிறது.

ஒரு துறைக்கு உறுப்பினர் குறிப்பிட்டு, இன்னொரு துறையில் இருந்து விடை வந்திருப்பது பற்றி சொன்னார்கள். உறுப்பினர்கள் கூட தெரியாமல் ஒரு துறைக்கு அனுப்பிவிடலாம். ஆனால் துறையினர் பரிசீலித்து அதை எந்தத் துறைக்கு அனுப்பவேண்டுமோ அங்கே அனுப்புகிறார்கள். இதில் எந்தவிதமான பாயிண்ட் ஆப் ஆர்டரும் இல்லை.